1974 மார்ச் 4]

திரு. தா. சோனேயா : உடல் ஊனமுற்றோர் படித்து, எஸ்.எஸ்.எல்.ஸி.-க்கு மேல் படித்திருப்பவர்களுக்கு அரசாங்க அலுவலகங்களில் உத்தியோகங்கள் வழங்குகிற நேரத்தில் அவர்களுக்கு ஏதாவது முன் உரிமை வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்களுக்கு அப்படிப்பட்ட தொழில்களைச் செய்ய முடியும் என்றிருந்தால் அவர்களுக்கு என்று தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்பதை நம் எம்ப்ளாய்மென்ட் டைரக்டரேட் வலியுறுத்தி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 287-ம், 288-ம் அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.

நீலகிரியிலுள்ள வனத்துறை நிலங்கள் ஒப்படை.

* 289 வினா.—திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் விவசாயத்திற்கேற்ப உள்ள காட்டு நிலங்களை ஏழை அரிசனங்களுக்கும் நிலமில்லாத மலைவாசிகளுக்கும் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை.

திரு. கு. அ. பொம்மன் : ஏற்கனவே ஹரிஜனங்கள், மலைவாசிகள் காட்டு நிலங்களைக் கையடக்கம் செய்திருக்கிறார்கள். அவற்றையாவது அவர்களுக்கு ஒப்படை செய்வதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : கொடுக்கக் கூடிய அளவிற்கு இருந்த 364 ஏக்கர் நிலங்கள் குமரி சாகுபடிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. விநியோகிக்கிற அளவிற்கு இப்போது காட்டு நிலம் அங்கு கிடையாது.

திரு. ஆ. பரந்தாமன் : தமிழ்நாட்டில் சில பகுதிகளில் காட்டு நிலங்களை ஆக்கிரமணம் செய்துகொண்டு சில விவசாயிகள் பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கப்படவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட நிலங்களை எல்லாம் முழுதும் சர்வே செய்து, அவற்றை டி-நோட்டிபை செய்து அவர்களுக்கெல்லாம் பட்டா வழங்குவதற்கான விரிவான யோசனையை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஆக்கிரமிப்பு நிலங்களை, ஆட்சேபனை இல்லாமல் இருக்குமானால், ஆர்ஜிதம் செய்து கொடுக்கலாம்.

திரு. எம். தேவராசன் : தமிழ்நாட்டில் காட்டு நிலங்கள் இருக்க வேண்டிய அளவிற்கு இல்லை என்பது உண்மை. ஆகவே, அதை அதிகப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதிகப்படுத்த நிலம் இல்லாவிட்டாலும் இருப்பதைப் பேணி வளர்க்க வேண்டும் என்பதற்குத் திட்டம் இருக்கிறது.

திருமதி .த. ந. அனந்தநாயகி : நீலகிரி மாவட்டத்தில் பெரிய பெரிய தேயிலைக் கம்பெனிகள் அரசாங்க நிலங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அஸைன்மெண்ட் வாங்கியிருக்கிறார்களா இல்லையா என்பதற்குக் கூட சரியான கணக்கு எடுக்கப்படவில்லை. நீலகிரியில் பெரிய பெரிய தேயிலைக் கம்பெனிகள் அரசாங்க நிலங்களை எவ்வளவு வைத்திருக்கிறார்கள் என்பதற்கு அரசாங்கம் உடனடியாகக் கணக்கு எடுத்து லாண்ட்லெஸ் புவர் ஹரிஜன்ஸ்-க்கு அஸைன்மெண்ட் செய்து கொடுப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தனிப்பட்ட நிலங்களை எடுத்துக் கொடுப்பதில் சில சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன. ஆக்கிரமிப்பு என்று சொல்கிறார்கள். தெளிவான கணக்கு இருந்து சொன்னால், ஆக்கிரமிப்பாக இருந்தால் வெளியேற்றலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தமிழ்நாட்டு வனப் பகுதிகளில் பெரும் பகுதியை ப்ளாண்டேஷன் முதலாளிகள் கைவசம் வைத்து அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் சிறு விவசாயிகள் வைத்திருக்கிற நிலத்தை விட்டு அவர்களை அகற்றிவிட்டு அரசாங்கம் அதை எடுத்துக்கொண்டு விடுகிறது. ஆகவே, இனிமேலாவது ஏழை விவசாயிகள் கைவசம் வைத்திருக்கிற வனப் பகுதி நிலங்களை அந்த ஏழை மக்களுக்குப் பகிர்ந்தளிக்கும் திட்டத்தினை அரசாங்கம் மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஏற்கனவே சொன்னேன். சிறு விவசாயிகள் ஏதாவது ஆக்கிரமிப்பு செய்து வைத்திருந்தால், அதைப் பொதுவாகப் பார்க்கிறபோது ஆட்சேபனை இல்லாதிருக்குமானால், காடுகளை வளர்ப்பதற்குக் குந்தகம் இல்லாதிருந்தால், அதைக் கொடுப்பதற்கு எந்தத் தடையும் இருக்காது என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

திரு. ந. தருமலிங்கம் : தென் ஆர்க்காடு மாவட்டத்தில் இதுபோன்று காட்டோரமாக இருக்கிற நிலங்கள் ஹரிஜனங்களுக்கு அடமானம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த நிலங்களைக் காட்டு இலாகாவே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அதற்குரிய அதிகாரிகள் நோட்டீஸ் அனுப்பியும், வலியுறுத்தியும் வருகிறார்கள். உதாரணமாக பாவந்தூர் காட்டு நிலம். தடுக்க அதைத் அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது. ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தனிப்பட்டவர்கள், தனி விவகாரமாக இருப்பதால், விவரங்கள் கொடுத்தால் தகவல் தரலாம்.

1974 மார்ச் 6]

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: நீலகிரி மாவட்டத்தில் ஆக்கிரமிப்பு நிலங்கள் எவ்வளவு என்று புள்ளி விவரம் இருக்கிறதா? அதில் ஆட்சேபனை இல்லாதது எவ்வளவு இருக்கிறது? அப்படி ஆட்சேபம் இல்லாததை உடனடியாகக் கொடுப்பதில் என்ன சங்கடம் ஏற்படும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: முழு விவரங்கள் என்னிடம் தற்போது இல்லை.

திரு. கே. டி கே. தங்கமணி: நீலகிரி மாவட்டத்தில் பிர்லாவிற்குச் சொந்தமாக இருக்கக்கூடிய ஓவாலி எஸ்டேட் இருக்கிறது. அதில் ப்ளாண்டேஷனுக்கு அப்பாற்பட்ட அரசாங்கத்தின் நிலம் ஆயிரக்கணக்கான ஏக்கரை அவர்கள் எடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அப்படியானால் அதை எடுத்து அந்தப் பகுதியில் உள்ள நிலம் இல்லாத விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு ஏதாவது ஏற்பாடு உண்டா?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன்: அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலத்தை அவர்கள் வைத்திருக்கிறார்கள் என்று சொல்கிற விவரம் சரியல்ல. தனிப்பட்டவர்கள் நிலத்தை அரசாங்கம் எடுப்பது என்பதில் சட்டச் சிக்கல்கள் உள்ளன. அப்படி எடுத்தால் ஏழை மக்களுக்குக் கொடுப்பதில் ஆட்சேபனை இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: ப்ரைவேட் பாரஸ்டை எடுத்துக் கொடுப்பதற்கு இன்று நம் அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. அது மாதிரி ஏதாவது யோசனை உண்டா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். சட்டம் பரிசிலனையில் இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது அப்ஜக்ஷனபிள் அல்லாத நிலங்களைக் கொடுப்போம் என்று கூறினார்கள். இந்த 'அப்ஜக்ஷனபிள்' என்ற வார்த்தைக்கு டெபனிஷன் ஆதிகாலத்தில் எப்போதோ வைக்கப்பட்டது. ஆகவே, அதை என்னவென்று இன்றிருக்கக் கூடிய நிலைக்கு ஏற்றவாறு அந்த வார்த்தையின் பொருளை அரசாங்கம் மாற்றியமைக்குமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

திரு. கே. என். குமாரசாமி: வனப் பகுதிகள் புதிது புதிதாக ஆக்கிரமிக்கப்பட்டு வனப் பகுதிகளை அழித்துவிடுவார்கள் போலிருக்கிறது. மூன்றில் ஒரு பங்கு காடாக இருக்க வேண்டும் என்ற ஒரு கொள்கை இருக்கிறது. அந்த அளவிற்கு சர்க்கார் நிலங்களைப் பாதுகாத்து மீண்டும் வனங்களை அபிவிருத்தி செய்ய ஏற்பாடு செய்யுமா?

1974 மார்ச் 4]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நல்ல யோசனைதான். நிலம் ஏற்கனவே குறைந்த அளவில் இருக்கிறது என்பதற்காகத்தான் இருக்கிற இடங்களில் காடுகளை வளர்க்க வேண்டும் என்ற திட்டம் இருக்கிறது. எல்லோருடைய ஒத்துழைப்பின் பேரிலும் ஆக்கிரமிப்பைத் தடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளும் இருக்கிறது.

முந்திரித் தோட்டங்கள் ஏலம்

*290 வினா : திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அரசுக்குச் சொந்தமான முந்திரிக் காடுகள் ஏலத்திற்கு விடப்படுகின்றனவா?

(இ) ஆம் எனில், எந்தெந்த மாவட்டங்களில் எந்தெந்தப் பகுதிகளில்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :

(அ) ஆம்.

(இ) விவர அறிக்கை * அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : முந்திரித் தொழிற்சாலைகள் பல நம் மாநிலத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவர்களுக்கு முந்திரிப் பருப்பு கிடைப்பதில் கஷ்டமிருக்கிறது. ஆதலால் ஏலம் விடப்படுகிற நேரத்தில் இங்கு இயங்கும் தொழில் நிறுவனங்களுக்கு முன் உரிமை கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஏலம் விடுகிற முறையைக் குறைத்து அரசே கொள்முதல் செய்யலாமா என்று ஏற்பாடு செய்து பல மாவட்டங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. சில மாவட்டங்களில் குத்தகைக்கு விடும் ஏற்பாடு இருக்கிறது. நாளா வட்டத்தில் அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த அறிக்கையில் திருநெல்வேலி, ராமநாதபுரம் மாவட்டங்கள் மட்டும் தான் இருக்கின்றன. புதிதாக அமைந்துள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில் முந்திரித் தோட்டங்கள் அதிகமாக உள்ளன. அவற்றை மேலும் விரிவுபடுத்தி இம்மாதிரி ஏலத்திற்கு விடுவதற்கான ஏற்பாடு செய்ய அரசாங்கத்திற்கு ஏதாவது ஆலோசனை உண்டா ?

---

* 97ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்